பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 10 2026 TUESDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஸ்விட்சர்லாந்து அதிபர் திரு. Guy Parmelin-னுடனான பேச்சு ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அமெரிக்காவில் உள்ள தொழில்துறை தலைவர்களுடன் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் ஆலோசனை நடத்தினார்.
- தமிழ்நாடு, மேற்குவங்க மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.
- சர்வதேச வானியல் மற்றும் வான் இயற்பியல் ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்ற ஐந்து இந்திய மாணவர்களும் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- Arctic ஓப்பன் பேட்மிண்டன் போட்டி, ஃபின்லாந்தில் இன்று தொடங்குகிறது.

>>>>>><<<<<<

ஸ்விட்சர்லாந்து அதிபர் திரு. Guy Parmelin-னுடனான பேச்சு ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு தளவாட உற்பத்தி, அணுசக்தி, உள்கட்டமைப்பு, அறிவியல் தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்புகள், மாணவர்களுக்கான வாய்ப்புகள் ஆகியவற்றில் இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவை முன்னெடுத்துச் செல்வது குறித்து தாம் சுவிட்சர்லாந்து அதிபருடன் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரம், தூய்மை எரிசக்தி, விண்வெளி, யோகா, ஆயுர்வேதம் போன்ற துறைகளில் மேலும் ஒத்துழைத்து செயல்படுவது குறித்து விவாதித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

உலகளாவிய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக இருவரும் தொடர்ந்து இணைந்து செயல்படப் போவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஜி.20 வர்த்தக அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்ற மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல், அந்நாட்டு தொழில்துறை தலைவர்களுடன் நியூயார்க்கில் ஆலோசனை நடத்தினார்.

இந்தியாவில் முதலீடு செய்வது குறித்து, அவர்களுடன் அமைச்சர் விவாதித்தார்.

சிகாகோவிலும் அமெரிக்க தொழில்துறை தலைவர்களை சந்தித்த திரு. பியூஷ்கோயல், அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் முதன்முறையாக சர்வதேச சரக்கு கப்பல் போக்குவரத்து, அஸ்ஸாமிலிருந்து பங்களாதேஷ்-க்கு நேற்று தொடங்கியது

திப்ருகரிலிருந்து மெத்தனால் ஏற்றப்பட்ட சரக்கு கப்பல் போக்குவரத்தை மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சுமார் 80 ஆண்டுகளுக்குப் பிறகு பிரம்மபுத்ராவை சர்வதேச வர்த்தக பாதையாக மீண்டும் புத்துயிர் பெறச்செய்யும் நடவடிக்கையாக இது அமைந்துள்ளது.

இது, வடகிழக்குப் பகுதிகளுக்கு நேரடியான, குறைந்த செலவிலான வர்த்தக வழித்தடத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

>>>>>><<<<<<

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் படிவம்-6ஐ தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar சட்டவிரோதமாகவும், தன்னிச்சையாகவும் மாற்றியுள்ளார் என்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தியின் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள ஆணையம், இந்தப் படிவம்-6-உடன் இணைக்கப்பட்டுள்ள உறுதிமொழியை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பான உத்தரவு கடந்த ஆண்டு ஜூன் மாதம், ஆணையத்தின் ஒருமனதான ஒப்புதலுடன் பிறப்பிக்கப்பட்டது என்று அது கூறியுள்ளது.

கடந்த மே மாதம் உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை உறுதி செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் அதில் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தமிழ்நாடு, மேற்குவங்க மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளிலும், மேற்குவங்கத்தின் Rejinagar, Nandigram சட்டப்பேரவை தொகுதிகளிலும், புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி தொகுதியிலும் தேர்தல் நடைபெற்று வருகிறது.

அஸ்ஸாமின் Nagaon மக்களவைத் தொகுதியிலும் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

இத்தொகுதிகளில் பதிவாகும் வாக்குகளின் எண்ணிக்கை வரும் 9ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

>>>>>><<<<<<

கோவா சட்டப்பேரவையின் வெள்ளிவிழா இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, Porvorim-ல் உள்ள சட்டப்பேரவை வளாகத்தில் இன்று முதல் நான்கு நாட்களுக்கு பல்வேறு நிகழ்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அப்போது, சட்டப்பேரவை உறுப்பினர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். புகைப்பட கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் வெள்ளிவிழா கொண்டாட்டங்களில் மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, கோவா ஆளுநர் திரு. Ashok Gajapathi Raju ஆகியோர் தலைமை விருந்தினர்களாக பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சியின்போது, கோவா மாநில சட்டப்பேரவை கட்டிடத்தை நினைவுகூரும் சிறப்பு அஞ்சல்தலை மற்றும் சிறப்பு அஞ்சல் உறையும் வெளியிடப்படவுள்ளது.

>>>>>><<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், புதுதில்லியில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி தேசிய சமஸ்கிருத பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்று உரையாற்றுகிறார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் தெரிவித்த அப்பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் முரளி மனோகர் பாதக், இந்த பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டங்களை பெறவுள்ளதாக கூறினார்.

கல்வியில் சிறப்பிடம் பெற்ற 3 மாணவர்களுக்கு சங்கர்தயாள் சர்மா பதக்கங்களை குடியரசு துணைத்தலைவர் வழங்கவுள்ளதாகவும் பல்கலைக் கழக துணைவேந்தர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சர்வதேச வானியல் மற்றும் வான்இயற்பியல் ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்ற ஐந்து இந்திய மாணவர்களும் பதக்கங்களை வென்றுள்ளனர்.

வியட்நாமின் Hanoi-ல் நடைபெற்ற இப்போட்டியில் Pranjal Dixit, Sumant Gupta, Akshat Srivastava, Arnav Sehrawat ஆகியோர் தங்கதப்பதக்கத்தை வென்றனர்.

Harshil Amitkumar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா பதக்கப்பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

இந்த வானியல் மற்றும் வான்இயற்பியல் ஒலிம்பியாட் போட்டியில், 64 நாடுகளைச் சேர்ந்த 307 மாணவர்கள் பங்கேற்றனர்.

>>>>>><<<<<<

பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் நெல் அறுவடைக்குப் பின்னர், வைக்கோல் கழிவுகளை எரிப்பதை கண்காணிக்கும் வகையில், பறக்கும் படைகள் நியமிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, அடுத்த மாதம் வரை அந்த மாநிலங்களில் உள்ள 34 மாவட்டங்களில் சிறப்பு பறக்கும் படையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபடவுள்ளனர்.

>>>>>><<<<<<

தலைநகர் தில்லியில் பல்வேறு இடங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்ப்பதற்கான சிறப்பு முகாம் நேற்று நடைபெற்றது.

Jangpura, Adarshnagar, Madipur, Ambedkar Nagar உள்ளிட்ட இடங்களில் இப்பணிகள் நடைபெற்றன.

அப்பகுதிகளில் அடுத்த சிறப்பு முகாம் வரும் 11ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கிடையே, நாளையும் நாளை மறுநாளும் தில்லியில் உள்ள அனைத்து கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்ப்பதற்கான சிறப்பு முகாம் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

கருங்கடலில் வர்த்தக கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு வெளிநாட்டவர்கள் உயிரிழந்ததாகவும், கப்பல் ஊழியர்கள் சிலர் காயமடைந்ததாகவும் ருமேனியாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

எனிலும், கப்பலில் பயணம் செய்த இந்தியர்கள் 3 பேர் பாதுகாப்புடன் இருப்பதாக அந்த தூதரகம் கூறியுள்ளது.

தூதரக அதிகாரிகள் அவர்களுடன் பேசியதாகவும், காயமடைந்த ஒருவர் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஐ.நா. பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை அதன் பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார்.

சீர்திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக தடைபட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு உறுப்பு நாடுகளை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஐ.நா பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் திரு. அன்டோனியோ குட்டரஸ் எச்சரித்துள்ளார்.

>>>>>><<<<<<

கேரளா, கர்நாடகாவின் தெற்கு உட்பகுதி, மாஹே, காரைக்கால், புதுச்சேரி ஆகிய பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு கஷ்மீர், லடாக், தில்லி, பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், உத்தரப்பிரதேசம், உத்ராகண்ட், ஹிமாச்சலப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட், ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தில் இடியுடன் கூடிய பலத்த காற்று வீசக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தலைநகர் தில்லியில் இன்று பிற்பகல் மற்றும் மாலை நேரங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

*Arctic* ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

ஃபின்லாந்தின் *Vanta*-வில் நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் *H.S. Pranay, Srikanth, Unnati Hooda* உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<<

அர்ஜென்டினா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Diva Bhatia* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 6-3 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் *Isabella*-வை வென்றார்.

>>>>>><<<<<<

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

இரு அணிகளுக்கும் இடையே 5 ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரின் இரண்டாவது போட்டி, வரும் 9ஆம் தேதியும், மூன்றாவது போட்டி 11ஆம் தேதியும், நான்காவது போட்டி 14ஆம் தேதியும், ஐந்தாவது மற்றும் இறுதிப்போட்டி 17ஆம் தேதியும் நடைபெறவுள்ளன.

>>>>>>END<<<<<<